ISSN:2582-9599



# கார் நாற்பதில் அழகியலும் அறிவியலும்

**முனைவர் க. லதா**

**இணைப்பேராசிரியர் & தலைவர், தமிழ் உயராய்வு மையம்,**

**பாத்திமா கல்லூரி, மதுரை.**

**52**

**ஆய்வு நோக்கம்**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான கார் நாற்பது நூலில் இடம்பெறும் அழகியல் மற்றும் அறிவியல் செய்திகளை வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**ஆய்வுச்சுருக்கம்**

கண்ணன் கூத்தனார் இயற்றிய கார் நாற்பது அழகியல் உணர்வு மீதூறப் பாடப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, அகப்பாடல்களுள் உவம உருவகங்களை ப் பயன்படுத்தும் போது அறிவியல் செய்திகளும் இடம்பெறுமாறு புலவர் பாடியுள்ளார். தலைவன் மற்றும் தலைவியின் உணர்வுகளை வெளிப்படுத்த புலவர்கள் இயற்கையைப் பயன்படுத்தியுள்ளனர். தற்குறிப்பேற்ற அணியும் உவமைகளும் அழகியல் நோக்கிலும் அறிவியல் நோக்கிலும் சிறக்கின்றன

**திறவுச் சொற்கள்**

கார்நாற்பது - அழகியல் அறிவியல் - தற்குறிப்பேற்றம் உவம , உருவக அணிகள் - சான்றுப் பாடல்கள்- பண்டைப் புலவரின் அறிவியல் நோக்கு - காட்சிப்படுத்தும் அழகு

**முன்னுரை**

செவ்வியல் இலக்கியங்களுள் கார்நாற்பதும் ஒன்று. இந்நூல் பதினெண்கீழ்கணக்கு நூல்களுள் அகநூல். முல்லைத் திணையின் ஒழுக்கமான இருத்தலும் இருத்தல் நிமித்தமும் குறித்துப் புனையப்பட்டுள்ள ஓவியப்பாட்டு என இதனைக் கூறலாம். இதனை இயற்றியவர் கண்ணன் கூத்தனார். பொருள் வயினும் போர் வயினும் பிரிந்து சென்ற தலைமகனை எண்ணி ஆற்றியும் வருந்தியும் இருக்கும் தலைமகளின் உணர்வுகளையும், பிரிந்து சென்ற தலைமகனின் உணர்வுகளையும் விரித்துரைக்கும் அகநூல் இது. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பண்டைத்தமிழர் அவ்வியற்கையைக் கண்ணுற்ற விதத்தையும் அதனை நுணுகி நோக்கிப் பாடிய திறத்தையும் அப்பாடல்களில் வெளிப்படும் அழகியல் மற்றும் அறிவியல் கூறுகளையும் இக்கட்டுரை விளக்குகிறது.

அழகியல் என்பது மனம் சார்ந்தது. உணர்வு சார்ந்தது.

> **“அழகின் இயல்பினை ஆராய்வதும் படைப்புகளில் உள்ள அழகை அடையாளங்கண்டு இரசிப்பதும் அத்துடன் முருகியலுணர்வுடன் படைப்புகள் படைப்பது குறித்தும் பேசப்படும் இயலே அழகியல்”[1]**

என்று அழைக்கப்படுகிறது. அறிவியல் என்பது அறிவின் துணை கொண்டு உணர்வது. வெளிப்படுத்துவது. சங்கத்தமிழ்ப் புலவர்கள் அழகியல் மற்றும் அறிவியல் என இரண்டு

துறைகளிலும் சிறந்திருந்தனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

இயல்பாய் நிகழும் ஒரு நிகழ்வின் மீது தன் குறிப்பை ஏற்றிப்பாடும் போது அது தற்குறிப்பேற்ற அணியாகிறது. கார்நாற்பதில் இரண்டாவது பாடல் இவ்வணியில் அமைந்து சிறக்கிறது. கார்காலத்து இடியும் மின்னலும் மழையும் தலைவன் வரவினைத் தூதாக உரைக்கின்றன என்று தன் குறிப்பை ஏற்றித் தலைவி கூறுவதாக,

**"இன்னே வருவர் நமர் என்று எழில்** வானம்
**மின்னும் அவர் தூது உரைத்து" (கார். 2)**

என்று மதுரை கண்ணன் கூத்தனார் பாடுகிறார். இது போலவே அடுத்த பாடலிலும் தனித்திருக்கும் தலைவியைத் துன்புறுத்தவே வானம் ஆலங்கட்டி மழையைப் பொழிவித்தது என்று அழகுற வருணிக்கிறார் புலவர்.

**"வரி நிறப்பாதிரி வாட, வளி போழ்ந்து
அயிர்மணல் தண்புறவின் ஆலி** புரள
**உரும்இடி வானம் இழிய, எழுமே
நெருநல் ஒருத்தி திறத்து" (கார். 3)**

என்ற இப்பாடல், நேற்று வருந்தியிருக்கும் ஒருத்தியை மேலும் வருத்த, காற்றினைப் பிளந்து கொண்டு ஆலி மழையைப் பெய்வித்தது வானம் எனச் சொல்லோவியமாகச் சிறக்கிறது.

உவமைகளின்றிப் பாடல்கள் அழகு பெறுவதில்லை. கார்காலத்து ஊர்ந்து செல்லும் இந்திரகோபப் பூச்சிகள் சிதறிய பவளங்களாய்க் காட்சி தருகின்றன. இதனை,

**"பவழம் சிதறியவை போலக் கோபம்
தவழும் தகைய புறவு" (கார். 5)**

என்ற தொடர்களால் அறியலாம். தலைவியின் கண்களைத் தோற்ற உவமையால் சித்திரிக்கிறார் புலவர்.

**"வடு இடைப் போழ்ந்து அகன்ற கண்ணாய்" (கார். 6)**

என, மாவடுவில், நடுவே பிளந்த அகன்ற கண்கள் என்ற உருவுவமை செய்யுளின் அழகை ஒரு படி உயர்த்துகிறது. இவ்வுவமை எண்ணுந் தோறும் உள்ளத்தில் காட்சியாய்த் தோன்றுவது. அது போலவே காயாம் பூவின் தோற்றம் பெண்களின் அஞ்சனம் தீட்டிய கண்கள் போலத் தோற்றம் தருவதாக வருணிக்கிறது.

**"கண் இயல் அஞ்சனம் தோய்ந்த போல் காயா" (கார். 8)**

என்ற பாடலடி.

வடிவத்திலும், அமைப்பிலும், சொல்லிலும் பொருளிலும் அழகுறச் சொல்லப்பட்டவையே தமிழிலக்கியங்கள். தலைவன் வரவிற்காகக் காத்திருக்கும் தலைவியின் நிலைமையை உள்ளவாறே சித்திரிக்கும் கார்நாற்பது உருவகத்திலும் சிறப்புற்று விளங்குகிறது. பெண்களின் கண்களைப் போலப் பூத்துக் கிடந்தன கருவிளை என்று பாடியிருப்பின் அது உவமை. ஆனால், மதுரை கண்ணங்கூத்தனார்,

**“கருவிளை கண்மலர் போல் பூத்தன……**

**எரி வனப்பு உற்றன தோன்றி” (கார். 9)**

என்று பாடியுள்ளார். இப்பாடல் உவமானம் எது, உவமேயம் என்ற மயக்கத்தைத் தருகின்ற விதத்தில் அமைந்துள்ளது. தெரிந்த ஒன்றைக் கொண்டு தெரியாத ஒன்றை விளக்குவது உவமை. இப்பாடலில் கருவிளையும் கண்மலரும், நெருப்பும், தோன்றியும் இணைநிலையில் அமைந்து பாடலைச் சிறக்கச் செய்கின்றன.

வாசகர் அறியாத ஒன்றை மனக்கண் முன் நிறுத்தும் வகையில் பாடுதல் புலவரின் அழகியல் உணர்வை வெளிப்படுத்.தும். அவ்வகையில் காந்தளைச் சிறப்பிக்கும் உவமையொன்று புலவரின் அழகியல் உணர்வைக் காட்டுகிறது. பொதுவாக, காந்தள் மலர்கள் பெண்களின் விரல்களுக்கு ஒப்புமைப்படுத்தப்படும். ஆனால் கார்நாற்பதோ,

**“அணர்த்து எழு பாம்பின் தலைபோல் புணர்கோடல்**

**பூங்குலை ஈன்ற புறவு” (கார். 11)**

காடு பாம்பின் படம் போல வெண்காந்தள் மலர்கள் பூத்துக் கிடந்த நிகழ்வைப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

கார் மேகம், பெண்ணின் கருத்தடர்ந்த கூந்தலைப் போலத் தாழ்ந்து பெய்கிறது. மின்னல் ஒளி யானையை வெட்டும் வாள் போல் மின்னுகிறது. கார் நாற்பதுப்பாடல் ஒன்று அமைந்துள்ளது. கார்நாற்பதோ அகநூல். அதில் இடம்பெறும் உவமைச் செய்திகள் புறச் செய்திகளைக் கூறி முரண் அழகினைக் கொணடமைகின்றன. அப்பாடல் பின்வருமாறு,

**“……………………………………..**

**கூந்தல் வனப்பின் பெயல் தாழ, வேந்தர்**

**களிறு எறி வாள் அரவம் போலக் கண்வெளவி,**

**ஒளிறுபு மின்னும் மழை” (கார். 12)**

காதல்வயப்பட்ட தலைவன், தலைவி இருவரும் பிரிந்திருக்கும் பொழுதுகளில் ஒருவரை ஒருவர் எண்ணி வருந்துவர். அவர்கள் காணும் திசையும் பொருட்களும் தங்கள் அன்புக்குரியவர்களின் தோற்றத்தைக் காட்டும். இதை,

**“நோக்குவ எல்லாம் அவையே போறல்”**

**(தொல். பொருள். களவியல். 9)**

என்பார் தொல்காப்பியர்.

**“நின்னே போலும் மஞ்ஞையால**

**நின் நன்னுதல் நாறும் முல்லை மலர**

**நின்னே போலும் மான் மருண்டு நோக்க,**

**நின்னே உள்ளி வந்தனென்**

**நன்னுதலரிவை காரினும் விரைந்தே” (ஐங். 492)**

என்று ஐங்குறுநூற்றுத் தலைவன் தலைவியிடம் கூறுவான். அதுபோல, புரட்சிக் கவி பாரதி,

**"பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா**
**நின்றன் பச்சைநிறம் தோன்றுதையே நந்தலாலா"**

என்று கண்ணனைப் பாடுவார். இதனையே கார்நாற்பதில் தலைவன், தான் தேரில் வரும் வழியில் கண்டவை தலைவியை நினைவுறுத்த,

**"……………………**
**சிறு முல்லைப் போதெல்லாம் செவ்வி நறுநுதல்**
**செல்வமழைத் தடங்கண் சில்மொழி, பேதைவாய்**
**முள் எயிறு ஏய்ப்ப, வடிந்து" (கார். 21)**

எனப் பாடுகிறான். இவ்வாறாக, அழகியலைக் காட்டும் கார்நாற்பது, அறிவியல் கூறுகளையும் உட்கொண்டுள்ளது. மேகத்தின் வண்ணத்தை, தோற்றத்தை அறிவியல் கண்கொண்டு நோக்கியுள்ளார் புலவர். எண்ணெய் தேய்க்கப்பட்ட, யானையாய் மின்னுகிறது மேகம் என்றும், (கார். 12) கடல் நீர் ஆவியாகி மேலே சென்று மேகமாகிறது என்ற அறிவியற் கருத்தைப் புலவர் தாம் அறிந்த வரையில்,

**"பறைக்குரல் ஏறொடு பௌவம் பருகி" (கார். 17)**

என்றும் பாடுகிறார் புலவர். மேலும் வரகு என்னும் சிறுதானியம் குறித்துக் கூறும் போது,

**"கருங்கால் வரகின் பொரிப் போல் அரும்பு"**

என்று குறிப்பிடுகிறார். கரிய கால்களைக் கொண்ட வரகு அதன் பொரி போல அமைந்த அரும்புகள் என்னும் போது, பண்டைத் தமிழரின் காட்சியறிவு புலப்படுகிறது.

**முடிவுரை**

உள்ளதை உள்ளவாறே உணர்த்தும் போது தாங்கள் கண்டதைக் காட்சிப்படுத்தும்போது, அழகியலையும் அறிவியலையும் இணைத்தே அவர்கள் பதிவு செய்துள்ளனர் என்பது புலனாகிறது. அகப்பாடல்களே ஆயினும் அவை அழகியலும் அறிவியலும், புறச்செய்திகளும் நிரம்பப்பெற்று சிறக்கின்றன.

**அடிக்குறிப்புகள்**

1.Merriam Webster Dictionary
2. தொல்.பொருள். களவியல் : 9
3. ஐங்குறுநூறு - 492
4. பாரதியார் கவிதைகள்